19.06.2024

O.S.No.162/2019

வா.சா.1.திரு.கனகராஜன் த.பெ.வீரப்பன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1.நான் டிப்ளமோ படிப்பு படித்துள்ளேன். நான் யாதவா கல்லூரி அருகே உள்ள வஉசி நகரில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்துக்கு அருகே நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து ஆரம்பத்தில் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால், என்னிடம் காட்டப்படும் ஆவணம் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட ஆவணமா என்றால் எனக்கு அந்த ஆவணத்தினை பற்றி தெரியவில்லை. அந்த ஆவணத்தில் தர்ம சாஸ்தா செட்டில்மெண்ட் ஆவணம் என்று எழுதப்பட்டுள்ளது. தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண் கோபாலகிருஷ்ணகோன் பள்ளிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அவர்களுக்குரிய சொத்தினை கல்விதுறை வழியாக அனுமதி பெற்று எங்களுக்கு கிரையம் கொடுத்தார்கள். தாவா சொத்தினை நான் 16.06.1997ம் ஆண்டு கிரையம் பெற்றேன். தாவா சொத்தினை நான் அளந்து அத்துமால் பார்த்து கிரையம் பெறவில்லை என்றால் சரிதான், ஆனால் ஏற்கனவே அளந்து கற்கள் ஊன்றப்பட்டு இருந்தது. அவ்வாறு அளந்து கற்கள் ஊன்றப்பட்டு இருந்தது என்பதனை காண்பிப்பதற்கு புகைப்படம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளவைதான் தாவா சொத்து என்றால் இல்லை. தாவா சொத்து தற்போது கோபாலகிருஷ்ண பள்ளி விளையாட்டு மைதானமாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண பள்ளி விளையாட்டு மைதானமாக இருப்பது தாவா சொத்தா, இல்லையா என்றால் தாவா சொத்து இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக எனக்கும், பிரதிவாதிக்கும் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தினை தற்போது பள்ளி நிர்வாகம் அனுமதி இல்லாமல் யாரும் உள்ளே சென்று பார்க்க முடியாது என்றால் சரியல்ல, ஒரு சமயம் அடைத்து வைத்திருந்தார்கள், தற்போது அதனை எடுத்து விட்டார்கள், யார் வேண்டுமானாலும் அந்த சொத்திற்குள் போகலாம். தாவா சொத்தினை சுற்றிலும் கம்பிமுள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் தாவாசொத்துக்குள் போவதற்கு ஆங்காங்கே வழி இருந்தது. மேற்படி கம்பிவேலியை அமைத்தது பிரதிவாதி என்றால் சரிதான்.

3. தாவா சொத்திற்கு கம்பிவேலி அமைத்து சுமார் 10 ஆண்டுகள் இருக்குமா என்றால் சுமார் 5 ஆண்டுகள் இருக்கும். அந்த கம்பிமுள்வேலிக்குள்தான் பள்ளியும், அதன் விளையாட்டு மைதானமும் உள்ளது என்றால் விளையாட்டு மைதானம் மட்டும்தான் உள்ளது, பள்ளி கம்பிமுள்வேலிக்குள் இருக்கிறதா, இல்லையா என்று எனக்கு தெரியவில்லை, ஆனால் எனது இடம் அந்த கம்பிமுள்வேலிக்குள்தான் அமைந்துள்ளது. கோபாலகிருஷ்ண பள்ளி சுமார் 50 ஆண்டுகள் பழமையான பள்ளி என்றால் சரிதான். மேற்படி பள்ளியை ஒட்டி அமைந்துள்ள தாவா சொத்தில் கட்டுப்பட்ட விளையாட்டு மைதானத்தினைதான் மேற்படி பள்ளியின் வியைாட்டு மைதானமாக

பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. பள்ளியைச் சுற்றிலும் கம்பிமுள்வேலி அமைக்கப்பட்டு எத்தனை கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் 2 கேட்கள் உள்ளன. 4 கேட்கள் உள்ளன என்றாலும், அதனை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. எனது வீட்டு மனை எண்.21 ஆகும். அதற்குதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தும், என்னோடு சேர்ந்து மற்ற வழக்கினை தாக்கல் செய்தவர்களின் அந்த வழக்குகளின் சொத்தும் வரிசையாகதான் ஒன்றோடொன்று இணைந்துள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தும், என்னோடு சேர்ந்து மற்ற நபர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தும் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். நான் அய்யனாரை பார்த்ததில்லை, குருசாமி என்பவரிடம் இருந்துதான் கிரையம் பெற்றேன். தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும்சர்வே எண்.169/2 ல் உள்ள சொத்துக்களை பொறுத்து அய்யனார் என்பவர் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரின் கையொப்பத்தினை மோசடியாக இட்டு ஆவணங்கள் உற்பத்தி செய்து, கேரளாவில் உள்ள பாறசாலையில் சார்பதிவாளர் அலுவலகத்தில் மோசடியாக பதிவு செய்துள்ளார் என்றால் அதனை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தங்களது எதிர் வழக்குரையில் அய்யனார் என்பவர் இஎம்ஜி சௌந்திராஜன் கையொப்பத்தினை மோசடியாக இட்டு, கிரைய ஆவணம் பதிந்துள்ளார் என்று சொல்லி உள்ள போதும், அது குறித்து நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

5. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் வா.சா.ஆ-14 மற்றும் அவர் பெற்றதாக சொல்லப்படும் பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ-16 ஆகிய ஆவணங்களின் அசல் ஆவணத்தினை நான் கண்டதில்லை என்றால் சரிதான். நான் குருசாமி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன். எனக்கு கிரையம் கொடுத்த குருசாமி என்பவர் தாவா சொத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத அய்யனாரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரையம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியிடமாகத்தான் உள்ளது. வா.சா.ஆ-2 பட்டா நான் மனு கொடுத்து விசாரணையின் அடிப்படையில் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு கிரையம் வாங்கி கொடுத்து நபரிடம் நான் பணம் கொடுத்தேன். அவர் எனக்கு வா.சா.ஆ-2 பட்டாவினை பெற்று தந்தார். வா.சா.ஆ-2 பட்டா வழங்கிய நடவடிக்கையில் பிரதிவாதியை அழைத்து விசாரித்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் வா.சா.ஆ-2 பட்டா பிரதிவாதிகளை விசாரிக்காமல் தன்னிச்சையாக கொடுக்கப்பட்ட பட்டா என்றால் அந்த பட்டா செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ-3 முதல் வா.சா.ஆ-10 கிஸ்தி ரசிதுகளில் தாவா சொத்து கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-2 பட்டாவானது சர்வே எண்.28/24 க்கு உட்பட்ட சொத்திற்கானது என்றால் சரிதான். வா.சா.ஆ-2 பட்டாவிற்கும், தாவா சொத்திற்கும், தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்ணுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ-2 முதல் வா.சா.ஆ-10 வரையான கிஸ்தி ரசிதுகள் தாவா சொத்திதற்கு

தொடர்புடைய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிக்கு தெரியாமல் இந்த வழக்கிற்காக மோசடியாக நான் உற்பத்தி செய்துகொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-2 பட்டாவில் கண்டுள்ள சர்வே எண், பட்டா எண் ஆகியவை தாவா சொத்து விவரத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். இஎம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் 1 செண்டு நிலம் இருந்ததாக நான் எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இஎம்ஜி சௌந்திராஜனுக்கு கேரளாவில் 1 செண்டு நிலம் இருந்தது என்று அய்யனார் கிரைய பத்திரத்தில் கண்டுள்ளதை வைத்துதான் நான் பிராதில் சொல்லி உள்ளேன் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது.

7. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-30, வா.சா.ஆ-13 புல வரைபடம், லே அவுட் ஆகியவை எனது முன் கிரையதாரான குருசாமி கிரைய பத்திரத்திலோ, எனது கிரைய பத்திரத்திலோ இணைத்து காணப்படவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் உள்ள சொத்துக்களை வீட்டு மனையிடமாக பிரிக்கப்பட்டு இருநதால் அதுதொடர்பான கிரைய பத்திரங்களில் அதற்கான லே அவுட் குறிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட்டு இருக்கும் என்றாலும், அவ்வாறு எனது கிரைய பத்திரத்தில் காணப்படவில்லை என்பதால், நான் கூறுவது போல் வீட்டு மனை எதுவும் பிரிக்கப்படவில்லை என்றாலும், விற்பனை செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 30 மற்றும் வா.சா.ஆ-13 இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும், அவைகளுக்கும், தாவா சொத்து மற்றும் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்களுக்கும் தொடர்பில்லை என்றாலும் சரியல்ல.

8. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுப்பட்ட சொத்துக்கள் எந்த காலத்திலும் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு கிரையம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அய்யனார் என்பவர் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரின் கையொப்பத்தினை மோசடியாக இட்டு ஆவணங்களை உற்பத்தி செய்து குருசாமி கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும், அதன் அடிப்படையில் நான் கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரையம் மோசடியானது என்றால் சரியல்ல. தாவா சொத்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான், ஆனால் அதை நான் கிரையம் வாங்கி விட்டதால் அது தற்போது என்னுடைய சொத்தாகும். டிரஸ்டு சொத்தினை நீதிமன்ற அனுமதி பெயரில்தான் கிரையம் செய்ய முடியும் என்றாலும், அவ்வாறு எந்த முன் அனுமதி பெறாமல் கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரையம் சட்டப்படி செல்லதத்ககதல்ல என்றால் சரியல்ல.

9. தாவாசொத்து மேடு பள்ளமாக இருநததாக சொல்லப்படும் சங்கதி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது, நான் கிரையம் வாங்கிய போது சமதளமாக வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. தாவா சொத்து உள்ளடங்கிய சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் அடங்கிய சொத்துக்கள் ஒருபோதும் வீட்டு மனையிடமாக பிரிக்கப்படவில்லை என்றாலும், ஆரம்பத்தில் இருநது விளையாட்டு மைதானமாக இருநது வருகிறது

என்றாலும் சரியல்ல. தாவா சொத்து கோபாலகிருஷ்ண பள்ளிக்கும், பள்ளி கல்விதுறைக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பள்ளி கல்விதுறையையோ, கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டையோ, அய்யனாரையோ, நான் தரப்பினராக சேர்க்காததால் அவசிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற தோசத்திற்கு இந்த வழக்கு உள்ளாகிறது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்து உள்பட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்களை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த விவரம் தெரியுமா என்றால் நான் தளத்திற்கு செல்லும் முன்பே அளந்து விட்டார்கள். என்னைத் தவிர, என்னைப் போன்று மற்ற வழக்கு தொடுத்தவர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்களிடத்தில் நீதிமன்ற ஆணையர் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்களை அளவீடு செய்தார்கள் என்பதனை கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்த போது, நீதிமன்ற ஆணையர், தாவா சொத்து உள்ளடங்கிய சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் அடங்கிய சொத்துக்கள் கோபாலகிருஷ்ண பள்ளி விளையாட்டு மைதானமாகவும், விடுதியாகவும் உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த அறிக்கையில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக அந்த விவரங்களை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அளவீடு செய்ததை எதிர்த்து நானோ, என்னைப்போன்று கிரையம் பெற்ற நபர்களோ ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான்.

11. கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு இஎம்ஜி சௌந்திராஜன் அவர்கள் ரூபாய்.50,000 செலுத்தியதாக சொல்லப்படும விவரம் தெரியுமா என்றால் இந்தியன் வங்கியில் ரூபாய்.50,000 செலுத்தியதற்கான ரசிது நகலினை நான் பார்த்து தெரிந்து கொண்டேன், அசலை நான் பார்க்கவில்லை. அந்த ரசிதினை யார் என்னிடம் காண்பித்தார்கள் என்றால், இந்த வழக்கு தயார் செய்த போது என்னைப் போன்று வழக்கு தாக்கல் செய்த மற்றவர்கள் காண்பித்தார்கள், நான் பார்த்தேன். அதன் உண்மை தன்மையை நான் வங்கியில் சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடும்பத்தினருக்கு பல்வேறு வழக்குகள் இருந்ததாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ளதால், அந்த வழக்குகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விபட்டுள்ளேன், முழுமையான விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தொடர்பான வழக்குள் அசல் வழக்கு எண்.75/2011, 676/2009, 594/2009, 675/2009, 671/2009 ஆகிய வழக்குகளில் தாவா சொத்தில் கட்டுபபட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவை குறிப்பிடவில்லை என்பதற்காக தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று மறுக்க முடியாது என்றால் சரியல்ல.

12. பிரதிவாதிகளுக்கு பள்ளி, கல்லூரி உள்பட நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்ணை பிரதிவாதி குடும்பத்தினரிடையே நடைபெற்ற மேற்சொன்ன வழக்குகளில் குறிப்பிடபடவில்லை என்பதற்காக, அதை எனது வழக்கிற்கு அனுகூலமாக எடுத்துக்கொள்ள கூடாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு செண்டு 1 க்கு ரூபாய் 5 லட்சம் இருக்குமா என்றால் இருக்கும், நான் முறையாக மதிப்பிடு செய்து உரிய பரிகாரம்

கேட்காமல் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது உரிமையை பிரதிவாதிகள் மறுத்து எதிர் வழக்காடுவதால் விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்பது சட்டப்படி ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த தாவாவில் நான் தாக்கல் செய்துள்ள பெரும்பான்மையான ஆவணங்கள் நகல் என்பதால் அந்த ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கில் சாட்சியமாக அனுமதிக்க இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கோபாலகிருஷ்ண பள்ளி விளையாட்டு மைதானம் இயங்கி வருவதாக அசல் வழக்கு எண்.184/2019, 193/2019, 156/2019 ஆகிய வழக்குகளில் வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதால் அவர்களது சாட்சியத்திற்கு முரண்பட்டு நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும், அந்த சாட்சிகள் அளித்த சாட்சியத்தின் விவரத்தினை தெரிந்து கொண்டு சாதுர்யமாகவும், உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி அனுமதி இல்லாமல் தாவா சொத்திற்குள் செல்ல இயலாது என்றாலும், தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும், நான் தாவா சொத்தின் அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.